P.R.NO: 02

நாள்: 01.08.2017

செய்திகுறிப்பு

**திருநெல்வேலி மாவட்டத்தில் தெருக்களில் சுற்றிதிரியும் மனநோயாளிகளை மீட்டு மனநல காப்பகத்தில் சேர்க்கும் மீட்பு திட்டம்-பொதுமக்கள் தகவல் தருமாறு மாவட்ட ஆட்சியர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

திருநெல்வேலி மாவட்டத்தில் தெருக்களில் சுற்றிதிரியும் மன நோயாளிகளை மீட்டு மனநல காப்பகத்தில் சேர்த்தல் மற்றும் மருத்துவ சிகிச்சை அளிக்கும் பொருட்டு இம்மாவட்டத்திலும் பிசப் சார்ஜண்ட் என்ற அரசு சாரா தொண்டு நிறுவனம் மூலம் " மீட்புத்திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, திருநெல்வேலி மாவட்டத்திலும் தெருக்களில் சுற்றி திரியும் மனநலம் பாதிக்கப்பட்டோரை பொதுமக்கள் கண்டறியப்பட்டால் கீழ்காணும் தொண்டு நிறுவனத்தை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தால் மனநலம் பாதிக்கப்பட்ட நபரை மீட்டு மனநல காப்பகத்தில் சேர்த்தல் மற்றும் மனநோய் மருத்துவமனையில சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே தெருவில் சுற்றி திரியும் மனநலம் பாதிக்கப்பட்ட நபரை பொதுமக்களுக்கு தெரியவந்தால் பிசப் சார்ஜண்ட் அன்பின் இல்லம், ஊசிகோபுரம் அருகில், பாளைங்கோட்டை தொலைபேசி எண்: 0462-4562373 மற்றும் சமூக பணியாளர் கைபேசி எண் 9486273100 என்ற முகவரிக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்குமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.